பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 170 நாள்: 14.11.2017

# பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் தேங்காமல் விரைந்து அகற்றப்பட்டு வருகிறது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 13.11.2017 முதல் இன்று (14.11.2017) மாலை 6.00 மணியுடன் தோராயமாக 2.9 செ.மீ. அளவும், 30.10.2017 முதல் இன்றுவரை 58.16 செ..மீ. மழை பதிவாகி உள்ளது. இன்று மழைநீர் தேங்கிய 201 இடங்களில் 28 இடங்களில் உடனடியாக அகற்றப்பட்டது. மீதமுள்ள 173 இடங்களில் மழைநீர் அகற்றும் பணி இடைவிடாது நடைபெற்று வருகிறது. இன்று சாலையில் விழுந்த 4 மரம் உடனடியாக அகற்றப்பட்டு போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாவண்ணம் வழிவகை செய்யப்பட்டது.

மழைக்காலங்களில் தொற்றுநோய்கள் பரவுவதை தடுத்திட சுகாதாரத்துறையின் மூலம் மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், இன்று 62 நடமாடும் மருத்துவ முகாம்கள், 134 மருத்துவ முகாம்கள் என மொத்தம் 196 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 16,202 நபர்கள் பயனடைந்துள்ளனர். இதுவரை 1122 நடமாடும் மருத்துவ முகாம்கள், 2037 மருத்துவ முகாம்கள் என மொத்தம் 3,159 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு 2,95,264 நபர்கள் பயனடைந்துள்ளனர். வடகிழக்கு பருவமழையால் இல்லங்களில் சமையல் செய்ய இயலாத நிலையில் உள்ள 1100 நபர்களுக்கு இன்று உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 3,44,900 நபர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளது.

பேரிடர் மேலாண்மை மற்றும் வெள்ளக் கட்டுப்பாட்டு அறைக்கு பொதுமக்களிடமிருந்து 1913, வாட்ஸ் ஆப் மற்றும் தொலைபேசியின் வாயிலாக இன்று 216 புகார்கள் பெறப்பட்டு 102 புகார்கள் நிவர்த்தி செய்யப்பட்டது. இதுவரை 10,079 புகார்கள் பெறப்பட்டு 9,812 புகார்கள் தீர்வு காணப்பட்டது. மீதமுள்ள 267 புகார்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மழைநீர் வடிகால்வாய் இல்லாத இடங்களில் 60 ஜே.சி.பி. இயந்திரங்களை கொண்டு வாய்க்கால் ஏற்படுத்தி மழைநீர் வெளியேற்றப்பட்டு வருகின்றன. மேலும், ஆங்காங்கே தேங்கி நிற்கும் கால்வாய் அடைப்புகளும் மற்றும் குப்பைகளை அகற்றுவதற்கு 36 டிப்பர் லாரிகள், 2 பொக்லைன் இயந்திரங்கள், 16 பாப்காட் இயந்திரங்கள் பணியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பணிகளை மட்டும் மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் 922 பணியாளர்கள், இரவு பகல் பாராமல் மழைநீரை அகற்றுதல், குப்பைகளை அகற்றுதல் மற்றும் விழுந்த மரங்களை அகற்றுதல் போன்ற பணிகளை தொடர்ந்து செய்து வருகின்றனர் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**